**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 385/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 6 |
| Name : | விமல்ராஜ் |
| Father's Name/Husband Name: | ராஜாங்கம் |
| Village : | செஞ்சேரி |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 30/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 30.06.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி வெள்ளைச்சாமி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது செஞ்சேரி கிராமத்தில் வசித்து டீக்கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 இளவரசியை எனக்கு தெரியும். அவர் எனது நண்பரின் சித்தி. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 26.02.2025ம் தேதி மாலை 6.30 மணியளவில் பெரம்பலூர் புதிய பேருந்து நிலையம் வழியாக நான் சென்று கொண்டிருந்தேன். கிருஷ்ணா பிளைவுட்ஸ் கடை எதிரில் கூட்டமாக இருந்தது. நான் அங்கு சென்று பார்த்த போது அங்கு அ.சா.1 இளவரசியும் இரண்டு போலிஸ்காரர்களும் எதிரியும் இருந்தார்கள். நான் என்ன நடந்தது என்று விசாரித்த போது அ.சா.1 அவருடைய மகளுடன் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரி அவருடைய வாகனத்தின் மூலம் அ.சா.1ன் வண்டியை இடித்து அதில் இருந்த சாவியை எடுத்துக் கொண்டு அவரிடம் ஆபாச வார்த்தைகள் பேசி தகராறு செய்து கொண்டிருக்கிறார் என்று சொன்னார்கள். அது குறித்து அ.சா.1 எதிரியிடம் கேட்டுக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன். அப்போது எதிரி அ.சா.1யை தேவிடியா என்று அசிங்கமாக திட்டினார். அப்போது இரண்டு காவலர்களும் இருந்தார்கள். அவர்களும்

அங்கிருந்த மற்றவர்களும் எதிரியிடம் பேசி சாவியை வாங்கி அ.சா.1டம் கொடுத்து அனுப்பி வைத்துவிட்டார்கள். அதன்பிறகு எதிரி அங்கிருந்த சென்றுவிட்டார். இது குறித்து போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் டீக்கடை எங்கு வைத்துள்ளேன் என்றால் நான் துறையூர் ரோட்டில் உள்ள தனலெட்சுமி காலேஜ் அருகில் வைத்துள்ளேன். வழக்கமாக எத்தனை மணிக்கு நான் டீக்கடையை திறப்பேன் என்றால் காலை 5.30 மணியளிவில். சம்பவம் நடந்த அன்று எந்த காரணத்திற்காக நான் பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்திற்கு சென்றேன் என்றால் என் கடையில் வேலை செய்யும் நண்பரை பஸ் ஏற்றி விடுவதற்காக பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்திற்கு சென்றேன். சம்பவத்தன்று எனது டீக்கடையில் இருந்து எத்தனை மணிக்கு நான் கிளம்பினேன் என்றால் மாலை 5.45 மணிக்கு மேல் இருக்கும். எனது டீக்கடையில் இருந்து புதிய பேருந்து நிலையம் செல்வதற்கு எவ்வளவு நேரம் ஆகுமென்றால் 10 நிமிடம் ஆகும். அங்கு எனது நண்பரிடம் பேருந்து நிலையத்தில் எவ்வளவு நேரம் பேசினேன் என்றால் அவருடன் நேரம் எதுவும் நான் செலவிடவில்லை எனது நண்பரை பஸ்ஸில் ஏற்றிவிட்டு வந்துவிட்டேன். புது பஸ் ஸ்டாண்டில் வழியாக வரும்போது எத்தனை மணியிருக்கும் என்றால் 6.30 மணியிருக்கும். சம்பவம் நடக்கும் போது கூட்டத்தில் 50லிருந்து 100 பேர் இருந்திருப்பார்களா என்றால் இல்லை 10லிருந்து 15 பேர் இருப்பார்கள். சண்டையை ஆரம்பித்தில் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான் பாதியில் தான் நான் சென்றேன் அப்போது ஆஜர் எதிரியின் கையில் அ.சா.1ன் இருசக்கர வாகனத்தின் சாவியை வைத்திருந்தார். அ.சா.1 இளவரசி எனது நண்பரின் சித்தி என்பதாலும் அவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாகவும் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.